
Australian Government

வாக்களிப்பது கட்டாயமானது

உங்கள் அதிகாரப்பூர்வ

# கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பிற்கான கையேடு

இக் கையேட்டில் உள்ளடங்குவன:





பக்கம் 5




பக்கம் 25

# இக் கையேடு பற்றி

இந்த அதிகாரப்பூர்வ கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புக் கையேடு இரண்டு முக்கியமான ஆவணங்களை உள்ளடக்குகிறது:
உங்கள் அதிகாரப்பூர்வ 'Yes'/'No' கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு துண்டுப்பிரசுரம், மற்றும்
2023 கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பிற்கான உங்கள் அதிகாரப்பூர்வ வழிகாட்டி.




பக்கம் 5

### உங்கள் அதிகாரப்பூர்வ 'Yes'/'No' கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு துண்டுப்பிரசுரம்

**பக்கம் 6** **'அரசியல் சாசன'த்தில் என்ன மாற்றம் வரலாம்**

அரசியல் சாசனத்தில் மாற்றம் செய்ய முன்மொழியப்பட்ட விடயங்களை இந்தப் பக்கம் அடையாளம் காட்டுகிறது.

முன்மொழியப்பட்ட சட்டம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது: 'அரசியலமைப்பு மாற்றம்' ('அபொரிஜினி' மற்றும் 'டோரஸ் ஜலசந்தி தீவு மக்க'ளின் குரல்') 2023 (Constitution Alteration (Aboriginal and Torres Strait Islander Voice) 2023).

**பக்கம் 7** **'Yes' அல்லது 'No' நேர்வுகள்**

Yes என்று வாக்களிப்பதற்கான நேர்வும் No என்று வாக்களிப்பதற்கான நேர்வும் அருகருகே காண்பிக்கப்பட்டுள்ளன.

முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு ஆதரவாக அல்லது எதிராக வாக்களித்த மற்றும் அத்தகைய நேர்வை முன்வைக்க விரும்பிய பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்களால் 'Yes'/'No' நேர்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**'Yes' அல்லது 'No' நேர்வுகளை திருத்தம் செய்ய அல்லது உண்மையைச் சரிபார்ப்பதற்கான சட்ட மேலாண்மை அதிகாரம் AEC-இற்கு இல்லை.**




பக்கம் 25

### 2023 கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பிற்கான உங்கள் அதிகாரப்பூர்வ வழிகாட்டி

வாக்குப்பதிவு மற்றும் வாக்குச் சாவடிகள் பற்றிய முக்கிய தகவல்களையும் 'தேர்தல் ஆணையாள'ரிடமிருந்து வரும் ஒரு செய்தியையும் இந்த உத்தியோகபூர்வ வழிகாட்டி உள்ளடக்குகிறது.

இந்த அதிகாரப்பூர்வ வழிகாட்டி 'ஆஸ்திரேலிய தேர்தல் ஆணைய' (AEC)த்தினால் தயார் செய்யப்பட்டுள்ளது.



# மொழிபெயர்க்கப்பட்ட பதிப்புகள் மற்றும் அணுகிப் பெறத்தக்க வடிவமைப்புகள்

**உங்களின் உத்தியோகபூர்வ கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புக் கையேடு ஆங்கிலம் மற்றும் பிற பல்லினக் கலாசார மொழிகளிலும், 'முதல் குடிமக்க'ளின் மொழிகளிலும் (ஆடியோ மட்டும்) கிடைக்கிறது. மேலும் பார்வையற்ற அல்லது பார்வைக் குறைபாடுள்ள வாக்காளர்களுக்கான ஆங்கில மொழி வடிவங்களும், 'ஈஸி ரீட்' (எளிய வாசிப்பு) எனும் வடிவத்திலும் (அதிகாரப்பூர்வ வழிகாட்டி மட்டும்) உள்ளன.**

**கருத்துக் கணிப்பு வாக்களிப்பு மற்றும் வாக்களிப்பு பற்றிய கூடுதல் தகவகளுக்கு, உங்கள் மொழியில் உதவி பெற 1300 720 153-ஐ அழைக்கவும்.**

இந்தப் பக்கம் வேண்டுமென்றே வெறுமையாக விடப்பட்டுள்ளது



Australian Government

வாக்களிப்பது கட்டாயமானது

உங்கள் அதிகாரப்பூர்வ

# YES | NO

# கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு துண்டுப்பிரசுரம்

# ‘அரசியல் சாசன’த்தில் என்ன மாற்றம் வரலாம்

## அரசியல் சாசனத்தில் செய்யப்படவுள்ள உத்தேச மாற்றங்கள் குறித்த அறிக்கை

‘அரசியல் அமைப்புத் திருத்தம் (‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்களின் குரல்) 2023’, (Constitution Alteration (Aboriginal and Torres Strait Islander Voice) 2023) எனும் முன்மொழியப்பட்டுள்ள சட்டமானது அத்தியாயம் VIII இற்குப் பிறகு பின்வரும் வாசகத்தை சேர்ப்பதன் மூலம் ‘அரசியல் சாசன’த்தை மாற்றும்:

**அத்தியாயம் IX – ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்களுக்கான அங்கீகாரம்’ (Chapter IX—Recognition of Aboriginal and Torres Strait Islander Peoples)**

**‘129 ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்களின் குரல்’ (Aboriginal and Torres Strait Islander Voice)**

ஆஸ்திரேலியாவின் முதல் குடிமக்களாக ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்களை அங்கீகரிப்பதன் மூலம்:

(i) ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்களின் குரல்’ என்று அழைக்கப்படவிருக்கும் குழு ஒன்று இருக்கும்;

(ii) ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்கள் தொடர்பான விடயங்களில் ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்களின் குரல்’ பாராளுமன்றத்திற்கும் மற்றும் ‘காமன்வெல்த்’தின் நிறைவேற்று அதிகார அரசாங்கத்திற்கும் எடுத்துரைவுகளை சமர்ப்பிக்கும்;

(iii) பாராளுமன்றம், இந்த ‘அரசியல் சாசன’த்திற்கு உட்பட்டு, ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்களின் குரல்’ தொடர்பான விடயங்களிலும் அதன் கூட்டமைவு, செயல்பாடுகள், அதிகாரங்கள் மற்றும் நடைமுறைகள் உட்பட்ட விடயங்களிலும் சட்டங்களை உருவாக்குவதற்கான அதிகாரத்தைப் பெற்றிருக்கும்.

‘அரசியல் சாசன’த்தின் உள்ளடக்க அட்டவணையில் ‘அரசியல் சாசனத்தின் அத்தியாயம் VIII-இன் மாற்றம்’ (‘Chapter VIII Alteration of the Constitution’) பற்றிய குறிப்புரைக்குப் பிறகு பின்வரும் வாசகத்தை சேர்ப்பதன் மூலம் ‘அரசியல் சாசன’த்தையும் முன்மொழியப்பட்ட சட்டம் மாற்றும்:

அத்தியாயம் IX – ‘அபோரிஜின்’ மற்றும் டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்களுக்கான அங்கீகாரம்’ (Chapter IX—Recognition of Aboriginal and Torres Strait Islander Peoples)



# அடுத்து வரும் பக்கங்களில் நீங்கள் **‘Yes’** மற்றும் **‘No’** நேர்வுகளைக் காண்பீர்கள்

‘அரசியல் சாசன’த்தை மாற்றுவதற்காக முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு ஆதரவாக அல்லது எதிராக வாக்களித்த மற்றும் அத்தகைய வாதத்தை முன்வைக்க விரும்பிய பெரும்பான்மையான ஃபெடரல் ‘நாடாளுமன்ற உறுப்பினர்கள்’ மற்றும் ‘செனட்டர்க’ளால் ஒவ்வொரு நேர்வுக்குமான வாதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தவர்களும் அத்தகைய வாதத்தை முன்வைக்க விரும்பியவர்களும் ‘Yes’ எனும் நேர்வை உருவாக்கியுள்ள அதே வேளை முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு எதிராக வாக்களித்தவர்களும் அத்தகைய வாதத்தை முன்வைக்க விரும்பியவர்களும் ‘No’ எனும் நேர்வை உருவாக்கியுள்ளனர்.

*‘வாக்கெடுப்பு (செயல்முறைமை ஏற்பாடுகள்) சட்டம் 1984’* (Cth) பிரிவு 11(1)-இன்படி ஒவ்வொரு நேர்வுக்கும் வார்த்தை எண்ணிக்கை ஆங்கிலத்தில் 2,000 வார்த்தைகளுக்குள் இருக்கவேண்டுமென மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

# Yes என்று வாக்களிப்பதற்கான நேர்வு

**‘Yes’** என்று வாக்களிப்பதற்கான நேர்வு **பக்கம் 10** இல் தொடங்கி, பின்னர் ஒன்றுவிட்ட பக்கங்களில் காண்பிக்கப்பட்டுள்ளது.

**ஒரு முன்மொழியப்பட்ட சட்டம்:**

‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு மக்க’ளின் ‘குர’லை சட்டப்படி நிறுவுவதன் மூலம் ஆஸ்திரேலியாவின் ‘முதல் குடிமக்க’ளை அங்கீகரிக்க ‘அரசியல் சாசனத்தை’ மாற்றுதல்.

**A proposed law:**

To alter the Constitution to recognise the First Peoples of Australia by establishing an Aboriginal and Torres Strait Islander Voice.

**இதை எழுதியவர் யார்?**

முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த மற்றும் அத்தகைய நேர்வை முன்வைக்க விரும்பிய பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் இந்த வாதத்தின் உள்ளடக்கம் அங்கீகரிக்கப்பட்டது. (இதனை aec.gov.au/referendums/pamphlet.htm - இல் பார்வையிடலாம்). இந்த வாசகம் ‘தேர்தல் ஆணையாள’ரால் திருத்தம் செய்யப்படாமல் வெளியிடப்பட்டுள்ளது.



# No என்று வாக்களிப்பதற்கான நேர்வு

**‘No’** என்று வாக்களிப்பதற்கான நேர்வு **பக்கம் 11** இல் தொடங்கி, பின்னர் ஒன்றுவிட்ட பக்கங்களில் காண்பிக்கப்பட்டுள்ளது.

**ஒரு முன்மொழியப்பட்ட சட்டம்:**

‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு மக்க’ளின் ‘குர’லை சட்டப்படி நிறுவுவதன் மூலம் ஆஸ்திரேலியாவின் ‘முதல் குடிமக்க’ளை அங்கீகரிக்க ‘அரசியல் சாசனத்தை’ மாற்றுதல்.

**A proposed law:**

To alter the Constitution to recognise the First Peoples of Australia by establishing an Aboriginal and Torres Strait Islander Voice.

**இதை எழுதியவர் யார்?**

முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு எதிராக வாக்களித்த மற்றும் அத்தகைய நேர்வை முன்வைக்க விரும்பிய பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் இந்த வாதத்தின் உள்ளடக்கம் அங்கீகரிக்கப்பட்டது. (இதனை aec.gov.au/referendums/pamphlet.htm - இல் பார்வையிடலாம்) இந்த வாசகம் ‘தேர்தல் ஆணையாள’ரால் திருத்தம் செய்யப்படாமல் வெளியிடப்பட்டுள்ளது.

# Yes என்று வாக்களிப்பதற்கான நேர்வு

**‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்களுக்கும், அனைத்து ஆஸ்திரேலியர்களுக்கும் சிறந்ததொரு எதிர்காலத்திற்காக Yes என வாக்களியுங்கள்.**

**ஒற்றுமை, நம்பிக்கை மற்றும் நேர்மறையானதொரு மாற்றத்தை ஏற்படுத்த Yes என வாக்களியுங்கள்.**

## YES என வாக்களிப்பதன் அர்த்தம்:

**அங்கீகாரம்**

- நமது அரசியல் சாசனத்தில் ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்களை **அங்கீகரித்தல்** மற்றும் 65,000 ஆண்டுகால கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்திற்கு மரியாதை செலுத்துதல்.

**செவிமடுத்தல்**

- ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் விடயங்களில், இன்னும் சிறந்த முடிவுகளை மேற்கொள்வதற்காக அரசாங்கங்கள் அம்மக்களின் ஆலோசனைகளுக்கு **செவிமடுத்தல்.**

**அதி சிறந்த பலன்கள்**

- பழங்குடியின மக்கள் இன்னும் சிறந்ததொரு வாழ்க்கையைப் பெறும் வகையில், அவர்களது சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் வீட்டுவசதி ஆகியவற்றில் **நடைமுறை ரீதியான முன்னேற்றத்தை ஏற்படுத்துதல்**.

## இது உங்களால் மட்டுமே செய்யக்கூடியதொரு மாற்றமாகும்.

‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்களிடமிருந்தே நேரடியாக வருகின்ற ஒரு கருத்திற்கு Yes என வாக்களியுங்கள்: **‘ஒரு ‘குரல்’ மூலம் அரசியல் சாசன அங்கீகாரம் பெறல்’ (Constitutional Recognition through a Voice).**

## ‘குரல்’ என்பது என்ன?

‘குரல்’ (Voice) என்பது ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்களைக் கொண்ட ஒரு குழுவாகும். அவர்கள் தங்கள் சமூகத்தை பாதிக்கும் பிரச்சினைகள் குறித்து பாராளுமன்றத்திற்கும் அரசாங்கத்திற்கும் ஆலோசனை வழங்குவார்கள்.

ஒவ்வொரு மாநிலத்தையும் டெரிட்டரிப் பிரதேசத்தையும் சேர்ந்த பூர்வீக ஆஸ்திரேலியர்கள் மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவைச்’ சேர்ந்தவர்கள், பிராந்தியங்கள் மற்றும் தொலைதூர சமூகங்களின் பிரதிநிதிகள் இதில் அடங்குவர்.

‘குரல்’ -இன் உறுப்பினர்கள் அவர்களின் உள்ளூர் பகுதியில் உள்ள ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சேவை செய்வார்கள்.

## நமக்கு ஏன் அது தேவை:

‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரர் ஸ்ட்ரெய்ட் தீவு’ மக்கள் எதிர்கொள்ளும் பாரிய சவால்கள் உள்ளன:

- பூர்வீகமற்ற ஆஸ்திரேலியர்களை விடவும் இவர்களின் ஆயுட்காலம் 8 ஆண்டுகள் குறைவாகும்.
- மோசமான நிலையில் உள்ள நோய் மற்றும் குழந்தை இறப்பு விகிதம்.
- இரண்டு மடங்கு அதிகமாக உள்ள தற்கொலை விகிதம்.
- மற்றவர்களுக்கு உள்ளதை விடக் குறைவாகக் கிடைக்கும் கல்வி மற்றும் பயிற்சிக்கான வாய்ப்புகள்.

தற்போதைய அணுகுமுறை பயனளிக்கவில்லை என்பது தெளிவாகிறது.

இந்த இடைவெளிகளை நிரப்புவதற்கும், தீர்வுகளைக் கண்டறிவதற்கும், எதிர்காலத்தைத் திட்டமிடுவதற்கும், ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’வாசிகளின் வாழ்க்கை மற்றும் சமூகத்தைப் பாதிக்கும் பிரச்சினைகள் குறித்து அவர்களின் ஆலோசனைகளை நாம் கேட்டாக வேண்டும்.

‘Yes’ நேர்வு தொடர்கிறது பக்.12

**இதை எழுதியவர் யார்?** **முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த மற்றும் அத்தகைய நேர்வை முன்வைக்க விரும்பிய பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் இந்த வாதத்தின் உள்ளடக்கம் அங்கீகரிக்கப்பட்டது. (இதனை** aec.gov.au/referendums/pamphlet.htm **- இல் பார்வையிடலாம்). இந்த வாசகம் ‘தேர்தல் ஆணையாள’ரால் திருத்தம் செய்யப்படாமல் வெளியிடப்பட்டுள்ளது.**



# No என்று வாக்களிப்பதற்கான நேர்வு

## NO என்று வாக்களிப்பதற்கான காரணங்கள் – ஒரு சுருக்கம்

இந்தக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு வெறுமனே “அங்கீகாரம்” என்பதை மட்டும் பற்றியதல்ல. இந்த ‘குரல்’ (Voice)-இற்கான முன்மொழிவு என்பது அதனையும் தாண்டி இன்னும் அதிக தூரம் செல்கிறது.

அது நிறைவேற்றப்பட்டால், நமது வரலாற்றிலேயே நமது அரசியல் சாசனத்தில் செய்யப்பட மிகப்பெரிய மாற்றமாக அது இருக்கும்.

இது, அறியப்படாத விளைவுகள் கொண்ட, சட்டப்பூர்வமான அபாயம் மிக்கது. அது பிரிவினை ஏற்படுத்தக் கூடியதாகவும் நிரந்தரமானதாகவும் இருக்கும்.

**உங்களுக்குத் தெரியாவிட்டால், no என்று வாக்களியுங்கள்.**

## அபாயகரமானது

நாம் அனைவரும் பின்தங்கிய சமூகங்களில் உள்ள பூர்வகுடி ஆஸ்திரேலியர்களுக்கு உதவ விரும்புகிறோம். இருப்பினும், இந்த ‘குரல்’ அதற்கான பதிலல்ல; அது நமது அரசாங்க அமைப்புக்கு நிஜமான அபாயத்தை ஏற்படுத்துகிறது.

இந்த ‘குரல்’ குறிப்பாக “நிறைவேற்று அதிகார அரசின்” அனைத்து பகுதிகளையும் உள்ளடக்குகிறது. இதன் பொருள் எந்தப் விடயமும் அதன் எல்லைக்கு அப்பாற்பட்டதல்ல என்பதாகும்.

அதன் அதிகாரங்களை இறுதியில் தீர்மானிப்பது ‘உயர் நீதிமன்ற’மேயாகும், பாராளுமன்றம் அல்ல.

இது சட்டரீதியான சவால்கள், தாமதங்கள் மற்றும் செயலிழந்த அரசாங்கம் போன்ற ஆபத்துகளை ஏற்படுத்தவல்லது.

## அறியப்படாதது

‘குரல்’ -இன் உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவார்கள் அல்லது அது எவ்வாறு செயல்படும் என்பது பற்றிய விவரங்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை. இந்த விவரங்கள் வெளிவருவதற்கு முன்பு வாக்களிக்குமாறு ஆஸ்திரேலியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வாக்களிப்பதற்கு முன்பு ஆஸ்திரேலியர்கள் விவரங்களைப் பெற்றிருக்க வேண்டும், பிறகு அல்ல.**

இது எவ்வாறு செயல்படும் என்று நமக்குத் தெரியாது, அதில் யார் இருப்பார்கள் என்று நமக்குத் தெரியாது, ஆனால் அது ஆஸ்திரேலியர்களான நம்மை நிரந்தரமாகப் பிரித்துவிடும் என்பது எங்களுக்குத் தெரியும்.

‘குரல்’-இன் ஆதரவாளர்கள் சிலர் இது பரிகாரங்கள், நஷ்டஈடு மற்றும் பிற தீவிர மாற்றங்களுக்கான முதல் படியாக இருக்கும் என்று கூறுகிறார்கள். எனவே, அடுத்ததாக வரவிருப்பது என்ன?

## பிளவுபடுத்தக் கூடியது

ஆஸ்திரேலியாவின் ஒரு குழுவினரின் குரலை மட்டும் அரசியல் சாசனத்தில் புனிதப் படுத்துவதென்பது நம் நாட்டை நிரந்தரமாகப் பிரிப்பதாகும்.

‘அரசியல் சாசன’த்தின் முழுப் பக்கபலத்தையும் கொண்ட ஒரு அறியப்படாத அமைப்பின் (body) மூலம் பல்வேறு வகையான குடியுரிமை வகுப்பினர்களை அது உருவாக்குகிறது. பல பழங்குடி ஆஸ்திரேலியர்கள் இதை ஆதரிக்கவில்லை.

## நிரந்தரமானது

அரசியல் சாசனத்தில் ‘குரல்’ ஒன்றிற்கு இடமளிப்பதென்பது அந்தக் ‘குரல்’ நிரந்தரமானது என்பதைக் குறிக்கும். நாங்கள் எதிர்மறையான விளைவுகளில் சிக்கிக்கொள்வோம்.

## NO என்று வாக்களிப்பதற்கான பத்துக் காரணங்கள்

‘No’ நேர்வு தொடர்கிறது பக்.13

**இதை எழுதியவர் யார்?** **முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு எதிராக வாக்களித்த மற்றும் அத்தகைய நேர்வை முன்வைக்க விரும்பிய பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் இந்த வாதத்தின் உள்ளடக்கம் அங்கீகரிக்கப்பட்டது. (இதனை** aec.gov.au/referendums/pamphlet.htm **-இல் பார்வையிடலாம்). இந்த வாசகம் ‘தேர்தல் ஆணையாள’ரால் திருத்தம் செய்யப்படாமல் வெளியிடப்பட்டுள்ளது.**

# **Yes** என்று வாக்களிப்பதற்கான நேர்வு

## ‘குரல்’ எவ்வாறு செயல்படும்:

**‘குரல்’ என்பது அறிவுரையாலோசனையைப் பற்றியதாகும்.**

மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளைப் பற்றி அரசாங்கங்கள் கேட்டறியும் பொழுது, அவை:

- இன்னும் சிறந்த தீர்மானங்களை எடுக்கும்.
- இன்னும் சிறந்த பலன்களைப் பெறும்.
- பணத்திற்குரிய இன்னும் சிறந்த பலன்களை வழங்கும்.

மேலும் சிறந்த குழந்தை ஆரோக்கியம் முதல் தொலைதூர பகுதிகளில் சேவைகளை மேம்படுத்துவது வரை, ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகள் குறித்த ஆலோசனைகளை ‘குரல்’ வழங்கும்.

அனைத்து சட்டங்கள், திட்டங்கள் மற்றும் நிதியளிப்பு என்பவற்றிற்குத் தொடர்ந்தும் பாராளுமன்றமும் அரசாங்கமுமே பொறுப்பாக இருக்கும்.

> **Patrick Dodson, மேற்கு ஆஸ்திரேலியாவின் செனட்டர், ‘Yawuru மூத்த தலைவர்’ கூறுகிறார்:**
> *“களத்திலுள்ள மக்களுக்கு செவிமடுத்து அவர்களுடன் இணைவாய்ச் செயலாற்றும்போது, மிகச் சிறந்த சட்டங்கள் மற்றும் கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன. ‘குரல்’-இன் ஆலோசனைகள் எமது தீர்மானங்களையும் வழிகாட்டுதல்களையும் இன்னும் அறிவார்ந்தவையாகவும், இன்னும் வெற்றிகரமானவையாகவும் மாற்றும். அரசியல் சாசனத்தின் மூலம் கிடைக்கும் இவ்வங்கீகாரம் புண்பட்ட எம் தேசம் ஆறுதல் பெற உதவும்.”*

## குரல்: முக்கிய உண்மைகள்

- இக்கருத்து ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்களிடமிருந்து வருவதாகும்.
- இது எமது அரசியல் சாசனத்தில் ‘முதல் குடிமக்களை’ (First Peoples) அங்கீகரிக்கிறது.
- இது ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்களைக் கொண்டதொரு குழுவாகும்.
- மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் குறித்து அவர்கள் குரல் எழுப்புவதற்கான வாய்ப்பை இது வழங்குகிறது.
- செவிமடுத்தல் என்பது இன்னும் சிறந்த பலாபலன்களைக் குறிக்கும் – மேலும் பணத்திற்கான இன்னும் சிறந்த பெறுமதியைத் தரும்.
- அனைத்து மாநிலங்கள் மற்றும் டெரிட்டரி பிரதேசங்கள், ‘டொரஸ் ஜலசந்தி தீவுகள்’ மற்றும் தொலைதூர சமூகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள்.
- இளைஞர்களை உள்ளடக்குவதோடு, ஆண்களையும் பெண்களையும் சமநிலையில் இது கொண்டிருக்கும்.
- அனைத்து சட்டங்கள், திட்டங்கள் மற்றும் நிதியளிப்பு என்பவற்றிற்கு தொடர்ந்தும் பாராளுமன்றமும் அரசாங்கமுமே பொறுப்பாக இருக்கும்.

**YES என வாக்களிக்க வேண்டியதற்கான இன்னும் 8 காரணங்களைத் தெரிந்துகொள்ள தொடர்ந்து வாசியுங்கள்.**

## 1. இந்த யோசனை ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு மக்களிடமிருந்து நேரடியாக வந்ததாகும்.

Yes, என வாக்களிப்பதன் அர்த்தம்:

- பல தசாப்தங்களாக ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு மக்களால் முன்வைக்கப்பட்ட ஒரு அபிலாஷையை ஆதரிப்பதாகும்.
- 80%-இற்கும் மேலான ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு மக்களால் ஆதரிக்கப்படும் ஒரு முன்மொழிவை ஏற்றுக் கொள்வதாகும்.

**‘குரல்’ ஒன்றிற்கான இந்த அழைப்பு அரசியல்வாதிகளிடமிருந்து வந்ததல்ல.**

‘Yes’ நேர்வு தொடர்கிறது பக்.14

**இதை எழுதியவர் யார்?**

**முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த மற்றும் அத்தகைய நேர்வை முன்வைக்க விரும்பிய பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் இந்த வாதத்தின் உள்ளடக்கம் அங்கீகரிக்கப்பட்டது. (இதனை aec.gov.au/referendums/pamphlet.htm - இல் பார்வையிடலாம்). இந்த வாசகம் ‘தேர்தல் ஆணையாள’ரால் திருத்தம் செய்யப்படாமல் வெளியிடப்பட்டுள்ளது.**



# **No** என்று வாக்களிப்பதற்கான நேர்வு

## 1. இந்த குரல் சட்டரீதியாக அபாயகரமானது

ஆஸ்திரேலியாவின் ‘அரசியல் சாசன’மானது நமது மிக முக்கியமான சட்ட ஆவணமாகும். ஒவ்வொரு வார்த்தைக்கும் வெவ்வேறு வியாக்கியானம் அளிக்கப்பட முடியும்.

ஆஸ்திரேலியா தனது அரசியலமைப்பை 1977 முதல் மாற்றவில்லை. **இது ஆஸ்திரேலியாவின் வரலாற்றிலேயே நமது ஜனநாயகத்தில் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய மாற்றமாக இருக்கும்.**

இது நாம் அறியாத விடயம் ஒன்றிற்குள் குதிப்பதாகும். இந்த ‘குரல்’ பொருத்தமானதுதானா என சோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. இது போன்ற அரசியல் சாசனத்தில் உள்ளடக்கப்பட்ட இதற்கு ஒப்பான குழு ஒன்று உலகில் வேறெங்கும் இல்லை.

அரசியல் சாசனத்தில் ஒரு ‘குரல்’-இற்கு சிறப்பு அங்கீகாரமளிப்பதானது உயர் நீதிமன்றத்தின் சட்ட சவால்களுக்கும், வெவ்வேறு வியாக்கியனங்களுக்கும் வழியமைக்கும்.

சட்ட வல்லுநர்கள் இதனை ஒப்புக்கொள்ளவில்லை, மேலும் அத்தகைய அரசியல் சாசன மாற்றத்திற்கு உயர்நீதிமன்றம் எவ்வாறு விளக்கம் அளிக்கும் என்பதை அவர்களால் உறுதியாக அறியவும் இயலவில்லை.

> **“ஒரு’குரல்’-இன் காரணமாக ஒரு தசாப்தம் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு அரசியல் சாசனம் மற்றும் நிர்வாகம் சம்பந்தப்பட்ட சட்ட வழக்காடல்கள் எழும் என்று நான் எதிர்பார்க்கிறேன்…”**
> (*முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி Ian Callinan AC KC*)[1]

இது சிக்கலான பல்வேறு சட்டப் பிரச்சனைகளுக்கு வழியமைக்கிறது.

## 2. விவரங்கள் எதுவும் இல்லை

அது ஒரு பெரிய முடிவு. இருப்பினும், **வாக்கெடுப்பிற்கு முன் அரசாங்கம் முக்கிய விவரங்களை வெளியிடாது**.

அது பின்தங்கிய சமூகங்களுக்கு எப்படி உதவும் மற்றும் இப்போது இருக்கும் இடைவெளியை அது எவ்வாறு நிரப்பும் என்பது நமக்குத் தெரியாது.

‘குரல்’ எனும் இந்த அமைப்பில் எத்தனை உறுப்பினர்கள் இருப்பார்கள் என்பது எங்களுக்குத் தெரியாது.

அவர்கள் வாக்கு மூலம் தெரிவு செய்யப்படுவார்களா அல்லது தேர்ந்தெடுக்கப்படுவார்களா, அல்லது அது எப்படி நிகழப்போகிறது என்பது எங்களுக்குத் தெரியாது.

அது எவ்வாறு பிரதிநிதித்துவங்களைச் செய்யும் அல்லது எவ்வாறு அது பொறுப்பேற்கும் தன்மை கொண்டதாக இருக்கும் என்பது நமக்குத் தெரியாது.

| |
|---|
| ஆஸ்திரேலியர்கள் வாக்களித்த பின்னரே இந்த விவரங்கள் என்ன என்பது தெளிவுபடுத்தப்படும். |

வாக்களிப்பதற்கு முன் விவரங்களைப் பெறுவதில் *“அர்த்தமில்லை”* என்று Yes வாக்களிப்புப் பிரச்சாரம் கூறுகிறது:

> “அரசியல் சாசனத்தை மாற்றுவதற்கான ஆஸ்திரேலிய மக்களின் ஆதரவைப் பெறும் வரை அந்த விரிவான ஆலோசனையை மேற்கொள்வதில் எந்த அர்த்தமும் இல்லை.”
> (*Yes23 சிற்றேடு*)

இது தவறான வழிமுறையாகும்.

நீங்கள் பார்வையிடாமல் ஒரு வீட்டையோ அல்லது சோதனை ஓட்டம் செய்யாமல் ஒரு காரையோ வாங்க மாட்டீர்கள்.

ஆனாலும், விவரங்கள் இல்லாமல் நமது அரசியல் சாசனத்தை மாற்ற வாக்களிக்குமாறு நீங்கள் கேட்கப்படுகிறீர்கள்.

வெற்று காசோலை ஒன்றில் கையெழுத்திடுமாறு ஆஸ்திரேலியர்களைக் கேட்கக்கூடாது.

1 ‘ஆஸ்திரேலியன்’ நாளேடு, 17/12/2022

‘No’ நேர்வு தொடர்கிறது பக்.15

**இதை எழுதியவர் யார்?**

**முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு எதிராக வாக்களித்த மற்றும் அத்தகைய நேர்வை முன்வைக்க விரும்பிய பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் இந்த வாதத்தின் உள்ளடக்கம் அங்கீகரிக்கப்பட்டது. (இதனை aec.gov.au/referendums/pamphlet.htm -இல் பார்வையிடலாம்). இந்த வாசகம் ‘தேர்தல் ஆணையாள’ரால் திருத்தம் செய்யப்படாமல் வெளியிடப்பட்டுள்ளது.**

# Yes என்று வாக்களிப்பதற்கான நேர்வு

2017 ஆம் ஆண்டில், நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் பல வருட கால முயற்சிக்கும், எண்ணற்ற உரையாடல்களுக்கும் பிறகு, கிட்டத்தட்ட 250 'அபோரிஜின்' மற்றும் 'டொரஸ் ஜலசந்தி தீவு'களின் தலைவர்கள் மற்றும் மூத்தோர்கள் *'இதயத்திலிருந்து எழும் உளுரு அறிக்கை' (Uluru Statement from the Heart)*-இற்கு ஒப்புதல் அளித்தனர்.

'குரல்' ஒன்றின் மூலம் அரசியலமைப்பில் அங்கீகாரம் கோருதல்.

அவர்களின் வாழ்க்கையில் நடைமுறையான மாற்றத்தை ஏற்படுத்தவும், அவர்களின் குழந்தைகளுக்கு மேலும் சிறந்த வாய்ப்புகளை உருவாக்கவும் உதவுமாறு எம்மிடம் வேண்டுதல்.

ஆஸ்திரேலியாவில் உள்ள அனைத்து மட்டங்களைச் சேர்ந்தவர்களும், அனைத்து மத நம்பிக்கைகள் மற்றும் கலாச்சாரங்களைச் சேர்ந்தவர்களும், அனைத்து அரசியல் தரப்பினரும் இந்த முன்மொழிவுக்கு தங்கள் ஆதரவை வழங்கியுள்ளனர்.

இப்போது நாம் அதை நிஜமாக்க முடியும்.

Yes என்று வாக்களிப்பதென்பது அனைத்து ஆஸ்திரேலியர்களையும் ஒன்றிணைக்கும் ஒரு ஒருமைப்பாட்டுச் செயலாகும்.

## 2. யதார்த்தமான பலாபலன்களுக்கான அரசியலமைப்பு அங்கீகாரம்.

அரசியலமைப்பு அங்கீகாரம் என்பது நடைமுறை மாற்றத்தை ஏற்படுத்தும் சக்திவாய்ந்ததொரு அறிவிப்பாகும்.

**Yes என வாக்களிப்பது:**

- 'அபோரிஜின்' மற்றும் 'டொரஸ் ஸ்ட்ரெய்ட் தீவு மக்களை ஆஸ்திரேலியாவின் 'முதல் குடிமக்களாக' அங்கீகரிப்பதாகும்.
- 65,000 ஆண்டுகால வரலாற்றைக் கொண்டாடுவதும் பகிர்ந்து கொள்வதுமாகும்.
- ஆஸ்திரேலியாவின் ஒற்றுமையைப் பற்றி வலுவானதொரு செய்தியை உலகிற்கு அனுப்புவதாகும்.
- எதிர்காலத்திற்கான ஆக்கபூர்வமான ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதாகும்.

'அபோரிஜின்' மற்றும் 'டொரஸ் ஸ்ட்ரெய்ட் தீவு' மக்களின் தலைமுறைகள் அவர்களின் கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றலினாலும், பூமி மற்றும் நீர் வளங்கள் பற்றிய அவர்களது அறிவினாலும் ஆஸ்திரேலிய வாழ்க்கைக்கு அவர்கள் செலுத்தியுள்ள பங்களிப்பினாலும் நமது தேசத்தை வளப்படுத்தியுள்ளனர்.

நமது பண்டைய கண்டம் உலகின் மிகத் தொன்மை மிக்க உயிர் வாழும் கலாச்சாரத்தின் தாயகமாகும். இதை நமது அரசியல் சாசனத்தில் அங்கீகரிப்பது, நமது பகிர்ந்து கொள்ளப்படும் வரலாற்றைக் கொண்டாட ஊக்கமளிக்கும் ஒரு வழியாகும்.

Yes, என்று வாக்களிப்பதென்பது யதார்த்தமான பலன்களை வழங்கும் ஒரு நல்லிணக்கச் செயலாகும்.

பூர்வீக ஆஸ்திரேலியர்கள் எங்களிடம் அங்கீகாரத்திற்கான ஆதரவு கேட்பதன் ஒரு வடிவமே 'குரல்' ஆகும். இது ஒரு நடைமுறை மாற்றத்திற்கான சாதனமாகும்.

**Johnathan Thurston, NRL சாம்பியன் மற்றும் பயிற்சியாளரான Gunggari வாசி ஆடவர் கூறுகிறார்:**
*"எங்கள் இளைஞர்கள் வாழ்வின் மிகச் சிறந்த நிலையை அடைவதற்கான வாய்ப்பைப் பெற அருகதையுடையவர்கள். குயின்ஸ்லாந்தில் உள்ள 'யர்ராபா' சமூகத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுடன் நான் நெருக்கமாக செயற்பட்டு வருகின்றேன். அவர்கள் எதிர்கொள்ளும் தடைகளை நான் பார்த்திருக்கிறேன். அவர்களின் உள்ளூர் சமூகத்தை விட வேறு எவரும் இதனை இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ள மாட்டார்கள். அவர்கள் கருத்துத் தெரிவிப்பதற்காக வாய்ப்பைக் கொடுப்பதென்பது எமது குழந்தைகளில் இன்னும் அதிகமானோர் தமது திறன்களை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெறுவர் என்பதைக் குறிக்கும். இதுதான் 'குரல்'-இன் நோக்கம்."*

'Yes' நேர்வு தொடர்கிறது பக்.16

**இதை எழுதியவர் யார்?** **முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த மற்றும் அத்தகைய நேர்வை முன்வைக்க விரும்பிய பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் இந்த வாதத்தின் உள்ளடக்கம் அங்கீகரிக்கப்பட்டது. (இதனை aec.gov.au/referendums/pamphlet.htm - இல் பார்வையிடலாம்). இந்த வாசகம் 'தேர்தல் ஆணையாளர்'ரால் திருத்தம் செய்யப்படாமல் வெளியிடப்பட்டுள்ளது.**



# No என்று வாக்களிப்பதற்கான நேர்வு

"எங்களுக்கு விவரம் தெரியாத ஒரு விடயத்தை ஆஸ்திரேலியர்கள் ஆகிய நாம் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?"
*('குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் குடும்ப வன்முறைத் தடுப்பு' நிழல் அமைச்சர் மற்றும் Arrernte பெண்மணியான செனட்டர் Kerrynne Liddle)*

## 3. இது எங்களைப் பிரிக்கிறது

நமது அரசியல் சாசனத்தில் ஆஸ்திரேலியர்களின் ஒரு குழுவிற்கு மட்டுமே சிறப்பு அந்தஸ்து வழங்குவதென்பது ஆஸ்திரேலியர்களை நிரந்தரமாகப் பிரிப்பதாகும். பல பழங்குடி ஆஸ்திரேலியர்கள் இதனை ஏற்கவில்லை.

**"இந்த 'குரல்' நம்மை ஒன்றிணைக்காது, இது நம்மை இனத்தால் பிரித்துவிடும்."**
*('பூர்வீக ஆஸ்திரேலியர்க'ளுக்கான நிழல் அமைச்சர் மற்றும் Warlpiri பெண்மணியுமான செனட்டர் Jacinta Nampijinpa Price)*

சட்டத்தின் முன் அனைத்து ஆஸ்திரேலியர்களும் சமம் என்ற நமது ஜனநாயக அமைப்பின் முக்கியக் கொள்கை ஒன்றிற்கு இது எதிரானது.

"முன்மொழியப்பட்ட s 129-ஐச் சேர்ப்பதன் அர்த்தம், நாம் அல்லது நம் முன்னோர்கள் எப்போது இந்த நாட்டிற்கு முதலில் வந்தோம் என்பதைப் பொறுத்து, நாம் அனைவரும் சமமாக இல்லாத ஒரு தேசமாக மாறுகிறோம் என்பதாகும்."
*(David Jackson AM KC, முன்னாள் ஃபெடரல் நீதிமன்ற நீதிபதி)*[2]

நமது 'அரசியல் சாசனம்' அனைத்து ஆஸ்திரேலியர்களுக்கும் சொந்தமானது. அனைத்து ஆஸ்திரேலியர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக எமது பாராளுமன்றம் உள்ளது. அது தற்சமயம் என்றுமில்லாதவாறு 11 'பழங்குடி உறுப்பினர்கள்' மற்றும் 'செனட்டர்'களை உள்ளடக்கியுள்ளது.

நாமனைவரும் "ஒன்றுபட்டவர்கள் மற்றும் சுதந்திரமானவர்கள்" என்பதைப் பிரதிபலிக்கும் வகையில் நமது தேசிய கீதம் சமீபத்தில் மாற்றப்பட்டுள்ளது.

**இதற்கு நேர்மாறாக, இந்தக் 'குரல்' ஆஸ்திரேலியர்களை சட்டத்தினாலும் மனநிலையினாலும் நிரந்தரமாகப் பிரித்துவிடும்.**

"நாங்கள் அனைவரும் ஆஸ்திரேலியர்கள். அதுவே முடிவாகவும் இருக்க வேண்டும். இந்த நாட்டை சரி பாதியாகப் பிளவுபடுத்தப்போகும் 'குரல்' எனப்படும் ஒன்றினால் இது பிரிக்கப்படக் கூடாது."
*(Ian Conway, Central Arrernte பாதுகாவலர்)*

## 4. இது பழங்குடி ஆஸ்திரேலியர்களுக்கு உதவாது

இப்போது இருக்கும் இடைவெளியை நிரப்புவதற்கும், சமரசத்தை அடைவதற்கும் பின்தங்கிய சமூகங்களில் உள்ள பழங்குடி ஆஸ்திரேலியர்களுக்கு உதவ நாம் அனைவரும் விரும்புகிறோம்.

**இருப்பினும், இன்னும் கூடுதலான அதிகார நிர்வாக மையங்கள் ஒரு தீர்வாக அமையாது.**

1,400 பணியாளர்களைக் கொண்ட 'தேசிய பூர்வீக ஆஸ்திரேலியர்கள் செயலாண்மை'-யுடன், அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் தற்போது நூற்றுக்கணக்கான பூர்வீக ஆஸ்திரேலியர்களுக்கான பிரதிநிதித்துவ அமைப்புகள் உள்ளன.

ஒரு மையப்படுத்தப்பட்ட 'குரல்' பிராந்திய மற்றும் தொலைதூர சமூகங்களின் தேவைகளைக் கவனிக்கத் தவறும் அபாயம் இருக்கும்.

"தேசிய மட்டத்திலான ஒரு குரல் பழங்குடியின நிலப்பிரதேச மக்களுக்காகப் பேச முடியாது."
*(Nyunggai Warren Mundine, AO, 'ஆஸ்திரேலிய ஒற்றுமை' குழு உறுப்பினர் மற்றும் Bundjalung ஆடவர்)*

2 'பாராளுமன்ற விசாரணை சமர்ப்பிப்பு', 11/04/2023

'No' நேர்வு தொடர்கிறது பக்.17

**இதை எழுதியவர் யார்?** **முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு எதிராக வாக்களித்த மற்றும் அத்தகைய நேர்வை முன்வைக்க விரும்பிய பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் இந்த வாதத்தின் உள்ளடக்கம் அங்கீகரிக்கப்பட்டது. (இதனை aec.gov.au/referendums/pamphlet.htm -இல் பார்வையிடலாம்). இந்த வாசகம் 'தேர்தல் ஆணையாளர்'ரால் திருத்தம் செய்யப்படாமல் வெளியிடப்பட்டுள்ளது.**

## 3. மக்கள் சிறந்ததொரு வாழ்க்கையை பெறுவதை உறுதிசெய்தல்.

*‘குரல்’ என்பது ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்களுக்கு பின்வருவனவற்றில் உண்மையான மேம்பாடுகளைக் கொணர்வதற்கான ஒரு சாதனமாகும்:*

- ஆயுள் எதிர்பார்ப்பு.
- குழந்தை இறப்பு வீதம் மற்றும் ஆரோக்கியம்.
- கல்வி மற்றும் வேலைவாய்ப்பு.

நீண்ட காலமாக, அரசாங்கங்கள் நல்ல நோக்கத்துடன் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பல பில்லியன் டாலர்களை செலவழித்து வந்துள்ளன.

ஆனால் அவர்கள் களத்திலுள்ள மக்களுக்கு செவிசாய்க்காததால் நீடிக்கும் முன்னேற்றத்தை அடையவில்லை.

தற்போதைய அணுகுமுறை உடைந்துவிட்டது, அதை சரிசெய்வதற்கான அதி சிறந்த வாய்ப்பாக இந்தக்‘குரல்’ அமைகிறது.

இந்தக் ‘குரல்’ எல்லாப் பிரச்சினைகளையும் உடனடியாகத் தீர்த்துவிடும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை, ஆனால் இறுதியாக சரியான அணுகுமுறை எமக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும்.

**பழங்குடியினரின் பேச்சுக்கு செவிசாய்ப்பது சிறந்த பலன்களை வழங்கியுள்ளது என்பதற்கான மூன்று எடுத்துக்காட்டுகள் இங்கே உள்ளன.**

**‘குரல்’ ஒன்றின் மூலம் ஆஸ்திரேலியா அடைய முடியுமான முன்னேற்றத்தைக் கற்பனை செய்து பாருங்கள்’.**

### செவிமடுப்பது பயனளிக்கும்: மேலும் சிறந்த சுகாதார சேவைகள்

சமூகக் கட்டுப்பாட்டில் இயங்கும் ‘அபோரிஜின் மருத்துவ சேவைகள்’ உள்ளூர் சுதேச பழங்குடியினரை வேலைக்கு அமர்த்துகின்றன.

அவை ‘கிளினிக்’குகளை நடத்துவதோடு தொலைதூர பகுதிகளுக்குச் சென்று குழந்தைகளுக்கு நோய்த்தடுப்பு மருந்தளித்தல் போன்ற அத்தியாவசிய சேவைகளை வழங்குகிறன.

தென்கிழக்கு குயின்ஸ்லாந்தில், ‘உள்ளூர் அபோரிஜின் மருத்துவ சேவை’யும் சமுதாயத்தினரும் கூட்டாக இயங்கி 10 ஆண்டுகளில் 550 ஆக இருந்த வருடாந்திர சுகாதார சோதனைகளின் எண்ணிக்கையை 20,000 வரை பெருமளவில் அதிகரிக்கச் செய்துள்ளனர்.

### செவிமடுப்பது பயனளிக்கும்: மேலும் சிறந்த கல்விப் பலாபலன்கள்

‘அர்ன்ஹெம் லேண்ட் (Arnhem Land)’-இல் உள்ள புதிய ‘துபுமா பார்கர்’ (Dhupuma Barker) பாடசாலையின் பாடத்திட்டமிடல் முதல் சீருடைகள் மற்றும் மதிய உணவுகள் வரை ஒவ்வொரு கட்டத்திலும், குடும்பத்தவர்களும் சமூகத் தலைவர்களும் ஈடுபாடு கொண்டுள்ளனர்.

உண்மையான கூட்டாண்மையானது **வலுவான பாடசாலை வருகை விகிதங்களுக்கும் மேலும் சிறந்த பலாபலன்களுக்கும்** உந்துசக்தியாக இருந்துள்ளது. ‘துபுமா ஃபயர்பேர்ட்ஸ் (Dhupuma Firebirds)’ ரோபோட்டிக்ஸ் அணி சமீபத்தில் ‘டெக்சாஸ்’-இல் நடந்த VEX ‘சர்வதேச சாம்பியன்ஷிப்’-இல் போட்டியிட்டது, இது ‘நொர்தென் டெரிட்டரி’-இலிருந்து தகுதி பெற்ற முதல் அணியாகும்.

> அதிபர் Phillip Heath கூறுவதாவது:
> *“சமூகத்தினரது கருத்துக்களுக்கு செவிமடுப்பதென்பது பிராந்திய மற்றும் தொலைதூரக் கல்வியில் ஒரு பாரியதோர் மாற்றத்தை ஏற்படுத்தும்.”*

### செவிமடுப்பது பயனளிக்கும்: சுதேச காட்டு இலாகா அதிகாரிகள்

பழங்குடியின நிலப்பிரதேசங்களில் சுமார் 2,000 ‘சுதேச காட்டு இலாகா அதிகாரி’கள் பணிபுரிகின்றனர்.

‘Yes’ நேர்வு தொடர்கிறது பக்.18

**இதை எழுதியவர் யார்?**

**முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த மற்றும் அத்தகைய நேர்வை முன்வைக்க விரும்பிய பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் இந்த வாதத்தின் உள்ளடக்கம் அங்கீகரிக்கப்பட்டது. (இதனை aec.gov.au/referendums/pamphlet.htm - இல் பார்வையிடலாம்). இந்த வாசகம் ‘தேர்தல் ஆணையாளா’ரால் திருத்தம் செய்யப்படாமல் வெளியிடப்பட்டுள்ளது.**





தற்போது, சில தொலைதூர சமூகங்களில் பேரழிவு தரும் சமூகப் பிரச்சனைகளைச் சமாளிக்க பல குரல்கள் உதவி கேட்டுக் கொண்டிருக்கின்றன. தேவைப்படுவது செயல்ரீதியான நடவடிக்கையே.

> **“கான்பெராவில் நமக்குத் தேவையானது செவிசாய்க்கும் காதுகள்தான், ‘குரல்’ அல்ல.”**
> *(‘பூர்வீக ஆஸ்திரேலியர்க’ளுக்கான நிழல் அமைச்சர் மற்றும் Warlpiri பெண்மணியுமான செனட்டர் Jacinta Nampijinpa Price கூறுகிறார்)*

## 5. எந்த பிரச்சினையும் அதன் எல்லைக்கு அப்பாற்பட்டதல்ல

இந்த ‘குரல்’ எனும் மாதிரி முறைமையானது பாராளுமன்றத்திற்கு மட்டுமல்ல, இது அதற்கு அப்பால் - “நிறைவேற்று அதிகார அரசாங்கத்தின்” அனைத்துப் பகுதிகளுக்கும் செல்கிறது. **அதில் சகல அரசுத் துறைகள், முகமைகள் மற்றும் பிற அமைப்புகள் (ரிசர்வ் வங்கி போன்றவை) ஆகிய அனைத்தும் அடங்கும்.**

பொருளாதாரம், தேசிய பாதுகாப்பு, உள்கட்டமைப்பு, சுகாதாரம், கல்வி மற்றும் இன்னும் பல விடயங்கள் சம்பந்தப்பட்ட முடிவுகள் அனைத்தும் அதன் வீச்சிற்குள் இருக்கும்.

அரசாங்கத்தின் ‘கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு பணிக்குழு’ உறுப்பினர் ஒருவரின் வார்த்தைகளில்:

> “அமைச்சரவை, அமைச்சர்கள், அரசு ஊழியர்கள், சுதந்திரமான சட்டப்பூர்வ அலுவலகங்கள் மற்றும் ரிசர்வ் வங்கி போன்ற முகமைகள் உட்பட அரசாங்கத்தின் அனைத்துப் பகுதிகளுடனும் பேசக் கூடியதாக இந்தக் ‘குரல்’ இருக்கும்... அக்குரலை அதனால் (அரசாங்கத்தினால்) அடைத்துவிட முடியாது.”
> *(பேராசிரியர்கள் Megan Davis மற்றும் Gabrielle Appleby)*[3]

இந்தக் ‘குரல்’-ஐ ஆதரிக்கும் அரசியலமைப்பு சட்டப் பேராசிரியர் ஒருவரின் வார்த்தைகளில்:

> “நிறைவேற்று அதிகார நடவடிக்கையின் முழு அளவிலான மறுஆய்வைத் தம்மிடம் தக்கவைத்துக்கொள்வதால் இது மிகவும் குறைபாடுடையது என்று நான் நினைக்கிறேன். இதன் அர்த்தம், நீர்மூழ்கிக் கப்பல்கள் முதல் வாகன தரிப்பிடச் சீட்டுகள் வரையான அனைத்து விடயங்களிலும் இந்தக் ‘குரல்’ கருத்து தெரிவிக்க முடியும்.... நீதித்துறைத் தலையீடுகளை தொடர்ந்தேர்ச்சியாக நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.”
> *(பேராசிரியர் Greg Craven AO)*[4]

பல சட்ட வல்லுநர்கள் அதன் வீச்சைப் பற்றிக் கவலை தெரிவித்துள்ளனர், இருப்பினும் அவர்களின் கவலைகள் வெறுமனே புறக்கணிக்கப்பட்டுள்ளன.

## 6. இது தாமதங்கள் மற்றும் செயலிழப்புகளை ஏற்படுத்தும் அபாயத்திலுள்ளது

ஆஸ்திரேலிய பாராளுமன்றம் ஆண்டுக்கு நூற்றுக்கணக்கான சட்டவாக்கங்களைக் கையாள்கிறது.

இந்தக் ‘குரல்’- இன் வீச்சு பாராளுமன்றத்திற்கு அப்பாற்பட்டு, துறைகள், முகமைகள் மற்றும் “நிறைவேற்று அதிகார அரசாங்க”த்தின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்குகிறது.

‘குரல்’ இதை எவ்வாறு கையாளும்?

**தம்முடன் ஆலோசனை செய்யப்பட விதம் அல்லது எடுக்கப்பட்ட முடிவு ஆகியவற்றில் ‘குரல்’ -இற்குத் திருப்தி இல்லை என்றால், அது நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்யலாம். இதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்?**

முடிவுகளை மேற்கொள்வதில் இது கணிசமான தாமதத்தை ஏற்படுத்தும் என்று பல சட்ட வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

> “தற்போது உள்ள பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிய நீண்ட விவாதங்களிலிருந்து கவனத்தைத் திசை திருப்பும் ஒரு விடயமாக இந்தக் ‘குரல்’ மாறிவிடக் கூடும். கருத்தில் கொள்ளப்படவிருக்கும் தேசிய மட்டத்திலான ஏறத்தாழ ஒவ்வொரு கவலைக்குரிய விடயத்திலும் ஏதோவொரு வகையான பூர்வீகக் கூறு இருப்பதாகவே பார்க்கப்படும்.”
> *(முன்னாள் WA உச்ச நீதிமன்ற நீதிபதி Nicholas Hasluck AM KC)*[5]

3 த ஆஸ்திரேலியன்’, 1/4/2023
4 ‘டெய்லி மெயில்’, 24/3/2023
5 ‘பாராளுமன்ற விசாரணை சமர்ப்பிப்பு’, 16/4/2023

‘No’ நேர்வு தொடர்கிறது பக்.19

**இதை எழுதியவர் யார்?**

**முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு எதிராக வாக்களித்த மற்றும் அத்தகைய நேர்வை முன்வைக்க விரும்பிய பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் இந்த வாதத்தின் உள்ளடக்கம் அங்கீகரிக்கப்பட்டது. (இதனை aec.gov.au/referendums/pamphlet.htm -இல் பார்வையிடலாம்). இந்த வாசகம் ‘தேர்தல் ஆணையாளா’ரால் திருத்தம் செய்யப்படாமல் வெளியிடப்பட்டுள்ளது.**

# Yes என்று வாக்களிப்பதற்கான நேர்வு

**காட்டுத்தீயைத் தடுக்கவும், காட்டுப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும், நமது நதிகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும்** பணியாற்றுவதன் மூலம் காட்டு இலாகா அதிகாரிகள் நமது சுற்றுச்சூழலைக் கவனித்துக்கொள்கிறார்கள்.

சுதேச காட்டு இலாகா அதிகாரிகளுக்குச் செவிமடுத்தல் என்பது 65,000 ஆண்டுகால அறிவையும், நமது நிலம் மற்றும் நீருடனான இணைப்பையும் பகிர்ந்து கொள்வதாகும்.

**ஆஸ்திரேலியா முழுதும் மேலும் சிறந்த பலன்கள் விளைய Yes என வாக்களியுங்கள்.**

**இடைவெளியை நிரப்ப உதவ Yes என வாக்களியுங்கள்.**

## 4. நம் நாட்டை ஒன்றிணையுங்கள்.

Yes, என வாக்களிப்பதென்பது:

- நமது கடந்த காலத்துடன் சமரசம் செய்து, இன்னும் நல்லதொரு எதிர்காலத்தை நோக்கிச் செல்வதைக் குறிக்கும்.
- உங்களால் மட்டுமே செய்யக்கூடிய ஒரு மாற்றம் என்பதைக் குறிக்கும்.

நமது 'அரசியல் சாசனம்' 1901 இல் நடைமுறைக்கு வந்ததில் இருந்து ஆஸ்திரேலியா வெகுதூரம் முன்னேறியுள்ளது.

பூர்வீக ஆஸ்திரேலியர்கள் மற்றும் அவர்கள் நம் நாட்டிற்கு செய்த பங்களிப்புகளை நாம்

இப்போது சரியான விதத்தில் போற்றிவருகிறோம்.

மக்கள்தொகையில் மற்றவர்களைப் போலவே 'அபோரிஜின்' மற்றும் 'டொரஸ் ஜலசந்தி தீவு' மக்கள் கணக்கிடப்படும் வகையில் 'அரசியல் சாசனத்தை' மாற்றுவதற்கு, 1967 ஆம் ஆண்டு நடந்த கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில், 90% ஆஸ்திரேலியர்கள் Yes என்று வாக்களித்தனர்.

அனைவரையும் ஒன்றிணைக்கும் ஒரு முன்னேற்றப் படியாக இது இருந்தது.

நாமனைவரும் ஒன்றிணைந்து அடுத்த கட்டத்திற்குச் செல்வதற்கான வாய்ப்பு ஒன்று உள்ளது – 'குரல்' ஒன்றின் வாயிலாக 'அபோரிஜின்' மற்றும் 'டொரஸ் ஜலசந்தி தீவு' மக்களை அங்கீகரிப்பதேயாகும் அது.

இதே போன்ற வரலாற்றைக் கொண்ட கனடா மற்றும் நியூசிலாந்து போன்ற பிற நாடுகள் பல தசாப்தங்களுக்கு முன்பு தங்கள் சொந்த 'முதல்குடி' மக்களை முறையாக அங்கீகரித்தன.

**பயப்பட ஒன்றுமில்லை என்பதை அனுபவம் காட்டுகிறது – மேலும், நம்மால் பெற இயலுமான நன்மைகள் எவ்வளவோ உள்ளன.**

> **Rachel Perkins, 'ஆலிஸ் ஸ்பிரிங்ஸ்' -ஐச் சேர்ந்த திரைப்படத் தயாரிப்பாளர், Arrernte/Kalkadoon வாசி பெண்மணி கூறுகிறார்:**
>
> *"நமது மக்கள் சிறந்ததொரு வாழ்க்கைக்கான வாய்ப்பிற்காக பல தசாப்தங்களாக பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இது போன்று நாம் என்றுமே திட உறுதியுடன் அல்லது ஒற்றுமையுடன் இருந்ததில்லை. இந்த 'குரல்' எங்களின் சிறந்த இலக்கு, அதை நாம் மேற்கொள்வோமாக."*

## 5. பண சேமிப்பு.

அரசாங்கங்கள் மக்களுக்குச் செவிசாய்க்கும்போது, அவை இன்னும் சிறந்த விளைவுகளைப் பெறுகின்றன, மற்றும் நிதியளிப்பை மிகவும் திறம்பட பயன்படுத்துகின்றன.

> **'ஆன்ட்டி' Pat Anderson AO, 'இணைத் தலைவர் - உளுரு உரையாடல்கள்', Alyawarre வாசி பெண்மணி சொல்கிறார்:**
>
> *"நீங்கள் மக்களை ஈடுபடுத்தும் போது, நீங்கள் சிறந்த முடிவுகளை எடுப்பீர்கள், மற்றும் நீங்கள் செலவழிக்கும் பணம் மிகவும் தேவைப்படும் இடத்தையும், தேவைகளுள்ள மக்களையும் சென்றடையும்: களத்திலுள்ள மக்களே இவர்களாவர்."*

இரு தரப்பு அரசாங்கங்களும் பல பில்லியன் டாலர்களை திட்டங்களில் முதலீடு செய்துள்ளன. ஆனால் அவை பிரச்சனைகளை சரி செய்யவோ, அல்லது சமூகங்களை சென்றடையவோ இல்லை.

'Yes' நேர்வு தொடர்கிறது பக்.20

**இதை எழுதியவர் யார்?**

**முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த மற்றும் அத்தகைய நேர்வை முன்வைக்க விரும்பிய பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் இந்த வாதத்தின் உள்ளடக்கம் அங்கீகரிக்கப்பட்டது. (இதனை aec.gov.au/referendums/pamphlet.htm - இல் பார்வையிடலாம்). இந்த வாசகம் 'தேர்தல் ஆணையாள'ரால் திருத்தம் செய்யப்படாமல் வெளியிடப்பட்டுள்ளது.**



# No என்று வாக்களிப்பதற்கான நேர்வு

சட்ட மேல்முறையீடுகள் மற்றும் தாமதங்களினால் ஏற்படும் ஆபத்து என்பது செயலிழந்த அரசாங்கம் ஒன்று உருவாகும் ஆபத்தை ஏற்படுத்தும் என்பதையே குறிக்கிறது.

இது ஆஸ்திரேலியாவிற்கு நல்லதல்ல.

## 7. இது செயல்பாட்டாளர்களுக்கான வாயிலைத் திறந்து விடுகிறது

சட்ட நிச்சயமற்ற தன்மை மற்றும் விவரங்கள் இல்லாமை என்பன 'அடுத்து என்ன வரும்?' என்ற கேள்வியை எழுப்புகிறது.

| |
|---|
| சில 'குரல்' ஆதரவாளர்கள் இந்தக் 'குரல்' பரிகாரங்கள், நஷ்டஈடு மற்றும் பிற தீவிர மாற்றங்களுக்கான முதல் படியாக இருக்கும் என்று கூறுகின்றனர். |

> "இதுவே முதல் படி, மற்றும் இது ஒரு முக்கியமான படி, மேலும் இது அனைத்து விளக்கவுரைகளையும் பின்தள்ளி விடுகிறது. எடுத்துக்காட்டாக, 'வாடகையைச் செலுத்துங்கள்' (Pay the Rent) எனும் இயக்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள், அதை எப்படி ஒளிவு மறைவில்லாததாக ஆக்குவது, மற்றும் 'அபோரிஜினி' மற்றும் 'டொரஸ் ஜலசந்தி தீவு' மக்களுக்கு பரிகாரங்களும் நஷ்டஈடும் வழங்கப்பட வேண்டும் என்பதை அது எவ்வாறு பார்க்கிறது...?
> ('*கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு பணிக்குழு'-வைச் சேர்ந்த Thomas Mayo*)[6]

ஒரு ஒப்பந்தம் மற்றும் உண்மை உரைப்பு என்பவற்றிற்கு முன்பாக, ஒரு 'குரல்' தான் முதல் படி என்று 'இதயத்தில் இருந்து எழும் உளுரு அறிக்கை' (Uluru Statement from the Heart) கூறுகிறது.

நிச்சயமாக, ஒரு உடன்படிக்கை என்பது அரசாங்கங்களுக்கு இடையிலான ஒப்பந்தங்களாகும்; குடிமக்களில் ஒரு குழுவிற்கும் அதன் அரசாங்கத்திற்கும் இடையே உள்ளதல்ல.

அரசாங்கத்தின் 'கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புப் பணிக்குழு' உறுப்பினர் ஒருவர், "உண்மை" என்பது "பழைய காலனித்துவ நிறுவனங்களின் ஒழிப்"பிற்கு வழியமைக்கக் கூடிய ஒரு "நெம்புகோலே" யாகும் என்று விளக்கம் அளித்துள்ளார்.

> "ஒப்பந்தங்களுக்கான பேச்சுவார்த்தைகள், சட்டவாக்கங்கள், சீர்திருத்தங்கள், மற்றும் நமக்கு தீங்கு விளைவிக்கும் பழைய காலனித்துவ நிறுவனங்கள் போன்ற நிறுவனங்களின் ஒழிப்பு போன்ற எமது மக்களின் தேவைகளை மேலும் ஊக்குவிப்பதற்கான ஒரு வழியேயாகும் இது."
> (*கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு பணிக்குழு'-வைச் சேர்ந்த Thomas Mayo*)[7]

ஏற்கனவே, பல ஆர்வலர்கள் **'ஆஸ்திரேலியா தின'த்தை ஒழிக்கவும், நமது கொடி மற்றும்** ஆஸ்திரேலியர்களுக்கு முக்கியமான **பிற நிறுவனங்கள் மற்றும் சின்னங்கள் ஆகியவற்றை** மாற்றவும் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

> "'ஆஸ்திரேலியா தின'த்தை ஒழி' #abolishAustraliaDay என்பது தொடர்ந்தும் இருந்து வருகிறது, தேதியை மாற்றுவதென்பது அதனைத் தவிர்க்கும் ஒரு முயற்சியே."
> ('*கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஈடுபாட்டுக் குழு'வைச் சேர்ந்த Teela Reid*)[8]

அரசியல் சாசனத்தின் மூலம் சிறப்பிக்கப்பட்ட ஒரு 'குரல்' இருக்குமாயின், இக் கோரிக்கைகள் மேலும் வலுவடையும்.

> "ஏக காலத்தில் இருக்கும் இறையாண்மையை' (coexisting sovereignty) அங்கீகரித்தல், சமாதான உடன்படிக்கை ஒன்றையும், பண இழப்பீடுகளையும் ஏற்படுத்துவதற்காக 'மகராட்டா' (Makarrata) கமிஷன் ஒன்று வடிவமைக்கப்படல், மற்றும் ஆஸ்திரேலிய வரலாற்றை மறுபடியும் எழுதுதல்... ஆகிய கோரிக்கைகளுக்கு ஆதரவாக இந்தக் 'குரல்' பயன்படுத்தப்படும் என்பதை ஆஸ்திரேலியர்கள் புரிந்து கொள்ள வேண்டும்...
> ஆஸ்திரேலிய சமுதாயத்திற்கு சீர்ப்படுத்தவியலாத பெரும் தீங்கு ஏற்படும் சாத்தியத்தைத் தவிர்க்க வேண்டுமெனில்,ஆஸ்திரேலிய அரசியல் சாசனத்தில் இந்தக் 'குரல்' ஒருபோதும் இணைக்கப்படக்கூடாது..."
> (*முன்னாள் NSW உச்ச நீதிமன்ற நீதிபதியான Terence Cole AO RFD KC*)[9]

---

6 'தேடல் அறக்கட்டளை' உரை, 12/2/2020
7 'தேடல் அறக்கட்டளை' உரை, 12/2/2020
8 ட்விட்டர், 24/1/2023
9 'ஸ்பெக்டேட்டர் ஆஸ்திரேலியா', 6/4/2023; 'பாராளுமன்ற விசாரணை சமர்ப்பிப்பு,' 19/4/2023

'No' நேர்வு தொடர்கிறது பக்.21

**இதை எழுதியவர் யார்?**

**முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு எதிராக வாக்களித்த மற்றும் அத்தகைய நேர்வை முன்வைக்க விரும்பிய பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் இந்த வாதத்தின் உள்ளடக்கம் அங்கீகரிக்கப்பட்டது. (இதனை aec.gov.au/referendums/pamphlet.htm -இல் பார்வையிடலாம்). இந்த வாசகம் 'தேர்தல் ஆணையாள'ரால் திருத்தம் செய்யப்படாமல் வெளியிடப்பட்டுள்ளது.**

# Yes என்று வாக்களிப்பதற்கான நேர்வு

உள்ளூர்வாசிகளின் பேச்சுக்கு செவிசாய்க்கவும் பணத்தை மிச்சப்படுத்தவும் ஒரு ‘குரல்’ எமக்கு உதவும்.

அரசாங்கங்கள் வரி செலுத்துவோரின் பணத்தை பிரயோசனமற்ற விடயங்களில் வீணாக்காதபோது நாம் அனைவரும் இன்னும் நலமாக இருப்போம்.

## 6. இதுதான் நேரம்.

ஒரு ‘குரல்’- என்ற கருத்தோட்டம் பல தசாப்தங்களாக உருவாக்கத்தில் இருந்துவந்துள்ளது. ‘அபோரிஜின்’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்கள் பலர் மிகுந்த கடின உழைப்பையும் நல்லெண்ணத்தையும் இதன் உருவாக்கத்திற்குப் பங்களிப்பு செய்துள்ளனர்.

No என்று வாக்களிப்பதன் அர்த்தம் எத்தகைய மாற்றமும் ஏற்படாது என்பதாகும். அதாவது, இப்போது இருப்பதை விட நம்மால் இன்னும் நன்றாகச் செயல்பட முடியாது என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம் என்ற அர்த்தத்தை அது குறிக்கும்.

**பின் வரும் நிலைகள் மேலும் தொடரும் ஆபத்தை ஏற்படுத்திக்கொள்ளாதீர்கள்:**

- அதி மோசமான ஆயுள் எதிர்பார்ப்பு.
- கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் அதி மோசமான முடிவுகள்.
- சுகாதாரத்தில் அதி மோசமான விளைவுகள்.

இந்த சுழற்சியை உடைத்து நம் தேசத்தை ஒன்றிணைக்க Yes என்று வாக்களியுங்கள்.

**Eddie Betts, ‘அடிலெய்ட்’ மற்றும் ‘கார்ல்டன் AFL விளையாட்டு வீரர்’, Gubrun, Wirangu/Kokatha வாசி ஆடவர் சொல்கிறார்:**

*“ஒரே இரவில் ‘குரல்’ எல்லாவற்றையும் சரி செய்யாது என்று எனக்குத் தெரியும், ஆனால் நம்மைப் பாதிக்கும் பிரச்சினைகளில் முடிவெடுப்பதில் நாங்கள் உள்ளடக்கப்படுகிறோம் மற்றும் மதிக்கப்படுகிறோம் என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒரு பாதையை இது திறப்பதாகவே நான் உணர்கிறேன்.”*

## 7. பயனளிக்கக் கூடிய நடைமுறை அறிவுரை.

சுதேச மக்களின் சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் வீட்டுவசதி ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான நடைமுறை நடவடிக்கைகள் குறித்து இந்த‘குரல்’ ஆலோசனை வழங்கும்.

இந்த‘குரல்’-ஐ ‘அரசியல் சாசனத்தில் சேர்ப்பதானது, தற்போதும் எதிர்காலத்திலும் அதற்கு ஸ்திரத்தன்மையையும், சுதந்திரத்தையும் அளிக்கும்.

குறுகிய கால அரசியல் விவகாரங்களில் சிக்கிக் கொள்ளாமல், வெளிப்படையான ஆலோசனைகளை வழங்க இந்த ‘குரல்’ -இனால் முடியும் என்பதே இதன் பொருள்.

**பூர்வீக ஆஸ்திரேலியர்கள் எதிர்கொள்ளும் அனைத்து சவால்களையும் ஒரே இரவில் தீர்க்க முடியாது. நடவடிக்கைகளும், அதே போல் நீண்ட காலத்திற்கான திட்டமிடலும் நமக்கு இப்போது தேவைப்படுகின்றன.**

அதனால்தான் ஒரு பேனாவின் கீறலைக் கொண்டு அழித்துவிட இயலாத ‘குரல்’ ஒன்று நமக்குத் தேவைப்படுகிறது.

சட்டங்கள் அல்லது முடிவுகளைத் தடுக்கவோ, தாமதப்படுத்தவோ, இரத்து செய்யவோ இந்த ‘குர’லுக்கு அதிகாரம் இருக்காது என்று சட்ட வல்லுநர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். இந்த **‘குரல்’** என்பது **ஆலோசனை வழங்குவதைப் பற்றியது மட்டுமேயாகும்**.

## 8. அரசாங்கம் தனது பணிகளை சிறப்பாக மேற்கொள்ளச் செய்தல்.

Yes என வாக்களிப்பதானது:

- அரசாங்கம் மேலும் சிறந்த ஆலோசனைகளைப் பெற்று இன்னும் சிறந்த பலாபலன்களை வழங்குவதைக் குறிக்கும்.
- இது அரசியல் சாசனத்தில் வல்லுனர்களது ஆதரவைப் பெற்ற மற்றோரு சேர்க்கை என்பதைக் குறிக்கும்.

‘Yes’ நேர்வு தொடர்கிறது பக்.22

**இதை எழுதியவர் யார்?**

**முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த மற்றும் அத்தகைய நேர்வை முன்வைக்க விரும்பிய பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் இந்த வாதத்தின் உள்ளடக்கம் அங்கீகரிக்கப்பட்டது. (இதனை aec.gov.au/referendums/pamphlet.htm - இல் பார்வையிடலாம்). இந்த வாசகம் ‘தேர்தல் ஆணையாள’ரால் திருத்தம் செய்யப்படாமல் வெளியிடப்பட்டுள்ளது.**



# No என்று வாக்களிப்பதற்கான நேர்வு

## 8. இது அதிக செலவை ஏற்படுத்தக் கூடியதும் தன்னாட்சி அதிகாரம் கொண்டதுமாக இருக்கும்

இந்தக் ‘குரல்’- இற்கு எவ்வளவு கூடுதல் நிதி ஒதுக்கப்படும் என்பது நமக்குத் தெரியாது.

இது கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பிற்குப் பிறகுதான் தீர்மானிக்கப்படும் என்பது மற்றொரு விவரம்.

அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் **தற்போது நூற்றுக்கணக்கான ‘அபோரிஜினி’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்களைச் சார்புபடுத்தும் அமைப்புகள் உள்ளன**.

> இந்த ஆண்டு, 1,400 பணியாளர்களைக் கொண்ட ‘தேசிய பூர்வீக ஆஸ்திரேலியர்கள் செயலாண்மை’-இற்கு அரசாங்கம் 4.3 பில்லியன் டாலர்களை ஒதுக்கியுள்ளது.

இந்த செயலாண்மையின் இணையதளம் மற்றும் கூட்டாண்மைத் திட்டம் கூறுவதாவது: “நாங்கள்... ‘அபோரிஜினி’ மற்றும் டொரஸ் ஜலசந்தி தீவு’ மக்களைப் பாதிக்கும் முடிவுகளில் அவர்கள் தமது கருத்தைத் தெரிவிப்பதை உறுதிப்படுத்துகிறோம்.”

இந்தக் ‘குரல்’ இவற்றில் எதற்கும் பதிலீடாக அமையுமா என்பதைப் பற்றி எந்தவொரு கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. பல நிர்வாக-அதிகார அலகுகளுக்கு மத்தியில் இதுவும் ஒன்றாகச் செயல்படும்.

## 9. இந்தக் ‘குரல்’ நிரந்தரமானதாக இருக்கும்

இந்தக் ‘குரல்’ ஒரு சோதனையோ அல்லது முன்னோடித் திட்டமோ அல்ல. மாற்றப்படத் தக்க சட்டவாக்கத்தில் அது இருக்காது.

‘அரசியல் சாசன’த்தில் ஒரு முறை சேர்க்கப்பட்ட பிறகு அது மீண்டும் திரும்பப்பெறப்பட மாட்டாது.

உயர்நீதிமன்றம் ஒரு முறை வியாக்கியானம் அளித்த பிறகு, பாராளுமன்றத்தினால் அதனை நிராகரிக்க முடியாது.

எதிர்மறையான விளைவுகளில் நாம் என்றென்றும் சிக்குண்டவர்களாக இருப்போம்.

## 10. முன்னோக்கிச் செல்ல இதனைவிட மேலும் சிறந்த வழிகள் உள்ளன

இந்தக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு என்பது ‘அரசியல் சாசன’த்தில் பூர்வீக ஆஸ்திரேலியர்களை அங்கீகரித்தல் என்பதைப் பற்றியது மட்டுமல்ல.

**ஆபத்தை ஏற்படுத்தவல்ல, நாமறியாத மற்றும் நிரந்தரமான ‘குரல்’ மூலமாகவன்றி அதனை வேறு விதமாக அடைய முடியும்.**

‘அங்கீகாரம்’ என்பதற்கு ஆஸ்திரேலியர்களின் பரவலான ஆதரவு உள்ளது. இருப்பினும், இந்தக் ‘குரல்’-இற்கான முன்மொழிவு என்பது பிரச்சனைக்குரியது.

கொள்கை அடிப்படையில் ‘குரல்’ ஒன்றை எதிர்க்கும் பல ஆஸ்திரேலியர்கள் இருக்கின்றனர்.

ஏனையோர் ஆபத்துக் குறைந்த ‘குரல்’ ஒன்றைப் பரிசீலிக்க தயாராக இருக்கலாம், ஆனால் அரசாங்கம் இந்த தெரிவை உங்களுக்கு வழங்கவில்லை.

அரசியல் சாசனத்தில் முந்தைய மாற்றங்கள் முன்மொழியப்பட்டபோது, விருப்பத் தெரிவுகளையும் விவரங்களையும் சரியாகக் கருத்தில் கொள்வதற்கென ஒரு ‘அரசியலமைப்பாண்மைச் சிறப்புக் குழு’ இருந்தது.

அத்தகைய செயல்முறை இங்கு காணப்படவில்லை. இந்த செயல்முறை அவசரமாகவும் கடுமையான விதத்திலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அணுகுமுறையானது ஒன்றிணைப்பதாகவோ அல்லது பயனுள்ளதாகவோ இல்லை, இது பிளவுபடுத்துவதாக இருக்கிறது.

‘No’ நேர்வு தொடர்கிறது பக்.23

**இதை எழுதியவர் யார்?**

**முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு எதிராக வாக்களித்த மற்றும் அத்தகைய நேர்வை முன்வைக்க விரும்பிய பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் இந்த வாதத்தின் உள்ளடக்கம் அங்கீகரிக்கப்பட்டது. (இதனை aec.gov.au/referendums/pamphlet.htm -இல் பார்வையிடலாம்). இந்த வாசகம் ‘தேர்தல் ஆணையாள’ரால் திருத்தம் செய்யப்படாமல் வெளியிடப்பட்டுள்ளது.**

# Yes என்று வாக்களிப்பதற்கான நேர்வு

மூத்த வழக்கறிஞர்கள் மற்றும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதிகள் இந்த செயல்முறையின் ஒரு பகுதியாக இருந்து வருகின்றனர்.

## சட்ட வல்லுநர்கள் சொல்வது:

- அரசியல் சாசன ரீதியிலும் சட்டப்பூர்வமாகவும் நேர்த்தியானது.
- நமது ஆட்சி முறையை **மேம்படுத்தும்**.
- இரத்து செய்வதற்கான அதிகாரம் இல்லை – இறுதி கையெழுத்திடல் பாராளுமன்றத்திடமும் அரசாங்கத்திடமுமே உள்ளது.

**Robert French AC, 'ஆஸ்திரேலிய உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி' 2008-2017 மற்றும் Geoffrey Lindell, 'அடிலெய்டு பல்கலைக்கழக'த்தின் ஓய்வு பெற்ற சட்டப் பேராசிரியர் கூறுகிறார்:**

*"இந்த 'குரல்' ஒரு பெரிய எண்ணக்கருத்தாகும், ஆனால் சிக்கலானது அல்ல. இதில் ஆபத்துக்கூறுகள் குறைவு, கிடைக்கக்கூடிய பலன்கள் அதிகம்...*

*பாராளுமன்றத்திற்கும் அரசாங்கத்திற்கும் அறிவார்ந்த மற்றும் ஒத்திசைவான மற்றும் நம்பகமான ஆலோசனைகளை வழங்குவதற்கு, இந்த 'குரல்' முதல்குடி மக்களுக்கு ஒரு நடைமுறை வாய்ப்பை வழங்கும்."*

- 'இணைக்-கருத்துக் கட்டுரை' (Joint Opinion Piece), ஆஸ்திரேலிய நிதி நிருவாக ஆய்வு, 4/2/2023.

## தற்போது தீர்மானம் நமது கையில்தான்.

**Evonne Goolagong Cawley AC MBE, முன்னாள் டென்னிஸ் உலகின் முதல் தர வீரர், Wiradjuri வாசி பெண்மணி கூறுவது:**

*"Yes, என்று வாக்களிப்பது அனைத்து ஆஸ்திரேலியர்களும், 'அபோரிஜின்' மற்றும் 'டொரஸ் ஜலசந்தி தீவு' மக்கள் நம் நாட்டிற்கு ஆற்றிய பங்களிப்பைக் கொண்டாடுவதற்கும், அடுத்த தலைமுறை அவர்களின் கனவுகளை அடைவதற்கு உதவுவதற்கும் ஒரு வாய்ப்பாகும். இந்த தருணத்தை இரு கரங்களாலும் இறுகப் பற்றுவோமாக."*

'அபோரிஜின்' மற்றும் 'டொரஸ் ஜலசந்தி தீவு' மக்கள் ஒரு தலைமுறைக்கு ஒரு முறை மட்டுமே கிடைக்க கூடிய ஒரு வாய்ப்பை நமக்குக் கொடுத்துள்ளனர்.

**இன்னும் சிறப்பானதொரு எதிர்காலத்தைக் கொண்டுவரக் கூடிய ஒரு சிறந்த ஒன்றிணைப்புத் தருணத்தின் ஒரு அங்கமாக இருக்க Yes என்று நாம் வாக்களிக்கலாம்.**

பின்வருவனவற்றிற்கு நாம் Yes என வாக்களிக்கலாம்:

- 'அபோரிஜின்' மற்றும் 'டொரஸ் ஜலசந்தி தீவு' மக்களுக்கு சரியானதைச் செய்தல்.
- மக்களுக்கு அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் பற்றிய கருத்துக்களைக் கூற அவகாசமளித்தல்.
- வாழ்க்கையை மேம்படுத்தும் ஒரு நடைமுறை மாற்றத்தை ஏற்படுத்துதல்.

**அங்கீகாரம் பெறுவதற்கும், செவிமடுப்பதற்கும், இன்னும் சிறந்த பலன்களைப் பெறுவதற்கும்** Yes என்று வாக்களிப்போமாக.

தங்கள் குழந்தைகளுக்கு அதிக வாய்ப்புகள் கிடைக்கவும் மேலும் சிறந்த வாழ்க்கையை 'அபோரிஜின்' மற்றும் 'டொரஸ் ஜலசந்தி தீவு' மக்கள் வாழ்வதை உறுதிசெய்யவும் Yes என வாக்களிப்போமாக.

ஒற்றுமை உணர்வுடன், நாமனைவரும் ஒன்றிணைந்து Yes என வாக்களிப்போமாக.

**'YES'** நேர்வின் இறுதி.

**இதை எழுதியவர் யார்?**

**முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த மற்றும் அத்தகைய நேர்வை முன்வைக்க விரும்பிய பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் இந்த வாதத்தின் உள்ளடக்கம் அங்கீகரிக்கப்பட்டது. (இதனை aec.gov.au/referendums/pamphlet.htm - இல் பார்வையிடலாம்). இந்த வாசகம் 'தேர்தல் ஆணையாளர்'ரால் திருத்தம் செய்யப்படாமல் வெளியிடப்பட்டுள்ளது.**



# No என்று வாக்களிப்பதற்கான நேர்வு

## இந்த முடிவு உங்களுடையது

இது மிக முக்கியமானதொரு முடிவு. துரதிர்ஷ்டவசமாக, பல ஆஸ்திரேலியர்களின் நியாயமான கேள்விகள் மற்றும் கவலைக்-கரிசனங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அதிர்ஷ்டவசமாக, இந்த கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பானது அரசியல்வாதிகள், கூட்டுத்தாபனங்கள் அல்லது பிரபலங்களால் தீர்மானிக்கப்பட மாட்டாது.

இதை ஒவ்வொரு ஆஸ்திரேலியர்களும் முடிவு செய்வார்கள். இது ஒவ்வொரு ஆஸ்திரேலியரையும் பாதிப்பதாகும்.

**உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிட்டால், no என்று வாக்களியுங்கள்.**

## மேலதிகத் தகவல்கள்

தகவல் மற்றும் புதுப்பிப்புகளுக்கு செல்க:

- www.riskyvoice.com
- www.oneandfree.au
- www.australiansforunity.com.au

**'NO'** நேர்வின் இறுதி.

**இதை எழுதியவர் யார்?**

**முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு எதிராக வாக்களித்த மற்றும் அத்தகைய நேர்வை முன்வைக்க விரும்பிய பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் இந்த வாதத்தின் உள்ளடக்கம் அங்கீகரிக்கப்பட்டது. (இதனை aec.gov.au/referendums/pamphlet.htm -இல் பார்வையிடலாம்). இந்த வாசகம் 'தேர்தல் ஆணையாளர்'ரால் திருத்தம் செய்யப்படாமல் வெளியிடப்பட்டுள்ளது.**

இந்தப் பக்கம் வேண்டுமென்றே வெறுமையாக விடப்பட்டுள்ளது



AEC
Australian Electoral Commission

# 2023 கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பிற்கான **உங்கள் அதிகாரப்பூர்வ வழிகாட்டி**

**வாக்களிப்பு நாள் எப்போது?**

மேலதிகத் தகவலுக்கு, ‘QR’ குறியீட்டை ‘ஸ்கேன்’ செய்யவும் அல்லது **aec.gov.au/referendums** -ஐப் பார்வையிடவும்

**aec.gov.au**
13 23 26

‘தேர்தல் ஆணையாளர்’ரால் அங்கீகரிக்கப்பட்டது, 10 மோர்ட் ஸ்ட்ரீட், கென்பேரா
Authorised by the Electoral Commissioner, 10 Mort Street, Canberra

# ‘தேர்தல் ஆணையாளர்’ரிடமிருந்து வரும் செய்தி

நாங்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றை நடத்தி நீண்ட காலமாகிவிட்டது. இறுதியாக 1999-ஆம் ஆண்டு ஒன்று நடத்தப்பட்டது, அதாவது இதை வாசிக்கும் பலருக்கு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றில் வாக்களிப்பது இதுவே முதல் முறையாக இருக்கும்.

கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு என்பது ‘அரசியல் சாசன’த்தில் ஒரு முன்மொழியப்பட்ட மாற்றம் குறித்த ஒரு தேசிய வாக்கெடுப்பு ஆகும். தற்போதைய நேர்வு யாதெனில், ‘அபொரிஜினி’ மற்றும் ‘டொரஸ் ஜலசந்தி தீவு மக்க’ளின் ‘குரலை’ சட்டப்படி நிலைநிறுத்துவதன் மூலம் ஆஸ்திரேலியாவின் ‘முதல் குடிமக்க’ளை அங்கீகரிக்க ‘அரசியல் சாசன’த்தை மாற்ற வேண்டுமா என்பதாகும்.

கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் வாக்களிப்பதென்பது தேர்தலிலிருந்து வேறுபட்டது, மேலும் முடிவுகள் ‘இரட்டைப் பெரும்பான்மை’ வாக்குகளை அடிப்படையாகக் கொண்டது – அதாவது:

- அனைத்து மாநிலங்கள் மற்றும் ‘டெரிட்டரி’ பிராந்தியங்களில் இருந்து தேசிய பெரும்பான்மையைப் பெறுதல் (50% க்கும் அதிகமாக), மற்றும்
- பெரும்பான்மையான மாநிலங்களில் (ஆறு மாநிலங்களில் குறைந்தபட்சம் நான்கில்) பெரும்பான்மையைப் பெறுதல் (50% க்கு மேல்).

கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் நீங்கள் வாக்களிக்கத் திட்டமிடுவதற்கு உதவியாக AEC இந்த வழிகாட்டியை உருவாக்கியுள்ளது. இதில், சரியாக வாக்களிப்பது எப்படி, வாக்குச் சாவடியில் என்ன நடக்கிறது மற்றும் தகவல் மூலங்களை எவ்வாறு சரி பார்ப்பது என்பதற்கான உதவிக்குறிப்புக்கள் உள்ளடங்கியுள்ளன.

வாக்களிக்கும் நாளில் நாடு முழுவதும் 7,000- இற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகள் திறக்கப்படும், முன்கூட்டியே வாக்களிப்பதற்கான சந்தர்ப்பங்கள் மற்றும் தொலைதூர இடங்களுக்குச் செல்கின்ற ‘தொலைதூர வாக்காளர் சேவை’ குழுக்கள் முன் எப்போதையும் விட அதிகமான அளவில் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.

பாரபட்சமின்றியும் சுயாதீனமாகவும் இருப்பதே ‘ஆஸ்திரேலிய தேர்தல் ஆணைய’த்தின் அடித்தளமாகும். நாங்கள் நடத்தும் செயல்முறைகளில் வெளிப்படைத்தன்மை, பாதுகாப்பு மற்றும் பொறுப்பேற்பு ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகவும் முழுமையாகத் தென்படக் கூடியவையாகவும் இருக்கும்.

இந்தச் செயல்முறையின் ஒவ்வொரு படியிலும் ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நேர்மைப்பாட்டுடன் வழங்குவதில் நாங்கள் வகிக்கும் பங்கைப் பற்றி நான் பெருமிதமடைகிறேன்.

மேலதிகத் தகவலுக்கு **aec.gov.au/referendums**-ஐப் பார்வையிடவும்.

**Tom Rogers**
‘தேர்தல் ஆணையாளர்’

வாக்காளர் பட்டியலில் உள்ள
**97%**
க்கும் அதிகமான தகுதி பெறும் வாக்காளர்கள்

**7,000+**
வாக்குச் சாவடிகள்

**500+**
முன் கூட்டிய வாக்களிப்பு மையங்கள்

**100,000** வரை
கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பிற்கான தற்காலிகப் பணியாளர்கள்

# நில் மற்றும் கவனி

## இந்த கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பின் மூலத்தைப் பரிசோதிக்கவும்.

கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு காலத்தில், வாக்குப்பதிவு செயல்முறை பற்றிய ஆதாரங்களில்லாத, அரைகுறையான அல்லது தவறாக வழிநடத்துகின்ற தகவல்களை நீங்கள் காண நேரிடலாம்.

AEC என்பது கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடத்தும் பொறுப்பில் உள்ள ஒரு சுயாதீன செயலாண்மை ஆகும். வாக்களிப்பில் பங்கேற்பதன் அவசியம், கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பின் நோக்கம் மற்றும் வாக்களிக்கும் விருப்பத்தெரிவுகள் பற்றி நாங்கள் வாக்காளர்களுக்குத் தெரிவிப்போம்.

கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு செயல்முறையைப் பற்றி நீங்கள் என்ன பார்க்கிறீர்கள், கேட்கிறீர்கள் மற்றும் வாசிக்கிறீர்கள் என்பதை கவனமாகக் கருத்தில் கொள்ளவேண்டியது அவசியம்.

தகவல்களின் பின்வரும் தன்மைகள் பற்றி கருத்தில் கொள்ள நேரம் ஒதுக்குங்கள்:

- அவற்றின் நம்பகத் தன்மை அல்லது அடையாளம் காணத்தக்க மூலம்
- தற்போதையது
- பாதுகாப்பானது (மோசடி அல்ல).

சமூக ஊடகங்களிலும் இணையத்திலும் இருப்பவையாயின் இவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டியது மிகவும் முக்கியமானது.

மேலதிகத் தகவலுக்கும் பயனுள்ள உதவிக்குறிப்புகள் கொண்ட குறுகிய காணொலிகளைப் பெறவும் **aec.gov.au/stopandconsider**-இற்குச் செல்லவும்.






# கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் வாக்களிக்க முன்கூட்டியே திட்டமிடுங்கள்

## வாக்குச் சாவடிகள் காலை 8 மணிக்குத் திறந்து சரியாக மாலை 6 மணிக்கு மூடப்படும்

### யார் வாக்களிக்க வேண்டும்?

18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய அனைத்து ஆஸ்திரேலியப் பிரசைகளும் இந்தக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பிற்காகப் பதிவு செய்து இதில் வாக்களிக்க வேண்டுமென்று வேண்டப்படுகின்றனர்.

### நான் எங்கே வாக்களிக்கலாம்?

வாக்களிப்பு நாளில் உங்கள் மாநிலம் அல்லது ‘டெரிட்டரி’ப் பிராந்தியத்திலுள்ள எந்த வாக்குச் சாவடியிலும் நீங்கள் வாக்களிக்கலாம். வாக்குச் சாவடிகள் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை திறந்திருக்கும்.

வாக்குச் சாவடிகள் பொதுவாக உள்ளூர் பாடசாலைகள், தேவாலயங்கள், சமூகக் கூடங்கள் மற்றும் பொதுக் கட்டிடங்களில் அமைந்துள்ளன. உங்களுக்கு மிக அண்மையிலுள்ள வாக்குச் சாவடியைத் தெரிந்துகொள்ள **aec.gov.au/where**-ஐப் பார்வையிடவும்.

நீங்கள் நடமாட முடியாதவராகவோ இயலாமையுடையவராகவோ இருந்தால், அல்லது யாரையாவது கவனித்துக் கொள்பவராக இருந்தால் நீங்கள் **aec.gov.au/where**-இல் வாக்குச் சாவடிகளைச் சென்றடைவதைப் பற்றிய விவரங்களை அறியலாம்.

பார்வையற்ற மற்றும் பார்வை குறைபாடுடையவர்களுக்கான வாக்களிக்கும் முறையை அறிய, **aec.gov.au/assistance** ஐப் பார்வையிடவும் அல்லது **13 23 26**-ஐ அழைக்கவும்.

### நான் வேறொரு மாநிலத்தில் அல்லது ‘டெரிட்டரி’ப் பிராந்தியத்தில் இருந்தால் என்ன செய்வது?

வாக்களிக்கும் நாளில் நீங்கள் வேறொரு மாநிலத்தில் இருந்தால், நிர்ணயிக்கப்பட்டுள்ள பிற மாநில வாக்களிப்பு மையம் ஒன்றில் நீங்கள் வாக்களிக்கலாம் அல்லது முன்கூட்டியே வாக்களிப்பதைக் கருத்தில் கொள்ளலாம்.

### வாக்களிக்கும் நாளில் என்னால் வாக்களிக்க முடியாவிட்டால் என்ன செய்வது? What

வாக்களிக்கும் நாளில் உங்கள் மாநிலம் அல்லது ‘டெரிட்டரி’ப் பிராந்தியத்தித்தில் உள்ள வாக்குச் சாவடிக்கு உங்களால் செல்ல முடியாவிட்டால், நீங்கள் நேரிலோ அல்லது தபால் மூலமோ முன்கூட்டியே வாக்களிக்கத் தகுதியுள்ளாவராய் இருக்கக்கூடும்.

### முன்கூட்டியே நேரில் வாக்களிப்பது எப்படி

நீங்கள் தகுதியுடையவராக இருந்தால், வாக்களிக்கும் நாளுக்கு முன்பே நீங்கள் வாக்களிக்கலாம். வாக்களிப்பு நாளுக்கு இரண்டு வாரங்களுக்கு முந்தைய திங்கட்கிழமை முதல் முன்கூட்டிய வாக்களிப்பு மையங்கள் திறக்கப்படும். திறக்கும் தேதிகளும் நேரங்களும் மாறுபடும், எனவே ஒவ்வொரு மையத்தைப் பற்றிய விவரங்களையும் தெரிந்துகொள்ள **aec.gov.au/where**-ஐப் பார்வையிடவும்.

முன்கூட்டியே வாக்களிப்பது பற்றிய மேலதிகத் தகவலுக்கும், நீங்கள் தகுதியுள்ளவரா என்பதைத் தெரிந்துகொள்ளவும் **aec.gov.au/early** -ஐப் பார்வையிடவும் அல்லது

### தபால் மூலம் முன்கூட்டியே வாக்களிப்பது எப்படி

தகுதியுள்ள வாக்காளர்களுக்கு தபால் மூலம் வாக்களிக்கும் வசதி உண்டு. உங்கள் தகுதியைப் பரிசீலித்து, இணையத்தில் **aec.gov.au/pva** அல்லது ‘QR’ குறியீட்டை ‘ஸ்கேன்’ செய்வதன் மூலம் விண்ணப்பிக்கவும்.

உங்களுக்கு இணைய அணுகல் வசதி இல்லாத சந்தர்ப்பத்தில் தபால் வாக்கிற்கு விண்ணப்பிக்க விரும்பினால் **13 23 26**-ஐ அழைக்கவும்.

**வாக்களிக்கும் நாளுக்கு முந்தைய புதன்கிழமை மாலை 6 மணிக்குள்** AEC-இற்கு வந்து சேரும் வகையில் தபால் வாக்கிற்கான உங்கள் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யவும்.

# வாக்குச்சாவடியில் என்ன நடக்கும்

1. நீங்கள் வாக்குச் சீட்டு வழங்கப்படும் இடத்தை அடைந்ததும், வாக்குச் சாவடி அதிகாரி உங்கள் முழுப் பெயரையும், முகவரியையும், 2023 கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் வாக்களித்தீர்களா என்றும் கேட்பார். மேலும் வாக்காளர் பட்டியலில் நீங்கள் வாக்களித்துவிட்டதைக் காண்பிக்கும் வகையில் உங்கள் பெயரில் குறியிடப்படும்.
2. உங்கள் வாக்குச்சீட்டு உங்களுக்கு வழங்கப்படும்.
3. வாக்குச் சீட்டில் உள்ள அறிவுறுத்துதல்களைக் கவனமாக வாசிக்கவும்.
4. உங்கள் வாக்குச் சீட்டை பூர்த்தி செய்யுவும்.
5. உங்கள் வாக்குச் சீட்டை பூர்த்தி செய்தவுடன், அதை மடித்து, வைக்கப்பட்டுள்ள வாக்குப் பெட்டியில் இடவும்.
6. நீங்கள் AEC ‘பென்சி’லைப் பயன்படுத்தியிருந்தால், வெளியேறும் வழியில் உள்ள பெட்டியில் அதனைப் போடவும். வெளியேறும் இடத்திற்கு அருகில் கைச் சுத்திகரிப்பான் இருக்கும்.

**உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், உங்களுக்கு நம்பிக்கையான ஒருவரை உங்களுடன் அழைத்து வரலாம் அல்லது வாக்குச்சாவடி அதிகாரி ஒருவரைக் கேட்கலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**

**எமது வாக்காளர்கள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பை AEC தீவிரமாகக் கவனத்தில் கொள்கிறது. AEC கோவிட்-19 சூழலை தொடர்ந்து கண்காணித்து வருவதோடு சம்பந்தப்பட்ட சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளையும் பின்பற்றுகிறது. இந்த வழிகாட்டியில் உள்ள தகவல்கள், அச்சிடப்பட்ட நேரத்தில் உள்ள சூழ்நிலைகளை பிரதிபலிப்பவை. ஆகவே, நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் நடவடிக்கைகளில் இது மாற்றங்களை ஏற்படுத்தலாம்.**


**கைச் சுத்திகரிப்பான் அங்கு கிடைக்கப் பெறும், மேலும் முகக்கவசம் ஒன்றை அணியுமாறும், உடல் இடைவெளியைப் பேணுமாறும் ஊக்குவிக்கப்படுகிறீர்கள். நீங்கள் சுத்தமான AEC பென்சிலைப் பயன்படுத்தலாம் அல்லது உங்கள் சொந்த பென்சில் அல்லது பேனாவைக் கொண்டு வரலாம்.**

# உங்கள் வாக்குகளை எவ்வாறு கணக்கில் எடுக்கப்படச் செய்வது

இக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பிற்காக ஆஸ்திரேலிய அரசியலமைப்பில் முன்மொழியப்பட்ட மாற்றத்துடன் கூடிய ஒரு வாக்குச் சீட்டைப் பெறுவீர்கள்.

வாக்குச் சீட்டில்:


முன்மொழியப்பட்ட மாற்றத்தை நீங்கள் அங்கீகரித்தால் **YES** என்று எழுதவும்


Commonwealth of Australia
**BALLOT PAPER**
State/territory
**Referendum on proposed Constitution alteration**
DIRECTIONS TO VOTER
**Write "YES" or "NO" in the space provided opposite the question set out below.**
**A PROPOSED LAW:**
There would be a description of the proposed constitutional change here.
**DO YOU APPROVE THIS PROPOSED ALTERATION?**
YES
WRITE "YES" OR "NO"


மாதிரி வாக்குச்சீட்டு

**அல்லது**

முன்மொழியப்பட்ட மாற்றத்தை நீங்கள் அங்கீகரிக்கவில்லை என்றால் **NO** என்று எழுதவும்


Commonwealth of Australia
**BALLOT PAPER**
State/territory
**Referendum on proposed Constitution alteration**
DIRECTIONS TO VOTER
**Write "YES" or "NO" in the space provided opposite the question set out below.**
**A PROPOSED LAW:**
There would be a description of the proposed constitutional change here.
**DO YOU APPROVE THIS PROPOSED ALTERATION?**
NO
WRITE "YES" OR "NO"


மாதிரி வாக்குச்சீட்டு

உங்கள் பதில் ஆங்கிலத்தில் எழுதப்பட வேண்டும்.

நீங்கள் ஏதும் தவறிழைத்தால் கவலைப்பட வேண்டாம். மற்றொரு வாக்குச் சீட்டைக் கேட்டுப் பெற்று மீண்டும் ஆரம்பிக்கலாம்.

**18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஆஸ்திரேலியப் பிரசைகளுக்கு வாக்களிப்பது கட்டாயமாகும். நீங்கள் வாக்களிக்கவில்லை என்றால் உங்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம் அல்லது உங்கள் மீது வழக்குத் தொடரப்படலாம். ஒருமுறைக்கு மேல் வாக்களித்தால் அது ஒரு குற்றச்செயலாகும்.**

'தேர்தல் ஆணையாளர்'ரால் அங்கீகரிக்கப்பட்டது, 10 மோர்ட் ஸ்ட்ரீட், கென்பேரா | Authorised by the Electoral Commissioner, 10 Mort Street, Canberra